# தொலைத் தொடர்பு தோழன்

## THOLAI THODARBU THOZHAN - Tamil Monthly


| மலர் - 4 | இதழ் - 5 | டிசம்பர் - 2018 | விலை ரூ.5/- |
|---|---|---|---|
| VOLUME - 4 | ISSUE - 5 | DECEMBER - 2018 | Rs. 5/- |


## ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL(AUAB)

தமிழ் மாநிலம்

நாடு முழுவதும் BSNLல் உள்ள
அனைத்து அதிகாரிகளும், ஊழியர்களும்

03.12.2018 முதல் காலவரையற்ற

# வேலைநிறுத்தம்

**கோரிக்கைகள் :**

1) 15 சதவிகித ஊதிய நிர்ணய பலனுடன் கூடிய 3வது ஊதிய மாற்றத்தை அமலாக்கு!
2) BSNLக்கு 4G ஸ்பெக்ட்ரத்தை உடனே வழங்கு!
3) ஓய்வூதியர்களுக்கு 01.01.2017 முதல் ஓய்வூதிய மாற்றம் அமலாக்கு!
4) அரசு விதிகளின் படி மட்டுமே BSNL ஓய்வூதிய பங்கீட்டை செலுத்த வேண்டும்!
5) 2வது ஊதிய மாற்றக் குழுவில் விடுபட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண்!

வெற்றிகரமாக்குவோம் வேலை நிறுத்தத்தை!
நமது உரிமைக்கான போராட்டம்!!
தேசம் காக்கும் கடமையை செய்யும் போராட்டம்!!!
ஊதிய மாற்றத்தை வென்றடைவோம்!!
BSNLஐ காத்திடுவோம்!! இறுதி வெற்றி நமதே!!

# DO OR DIE

டிசம்பர் 3, 2018 முதல் BSNL நிறுவனத்தில் பணியாற்றும் 1.85 லட்சம் ஊழியர்களும், அதிகாரிகளும், கால வரையற்ற வேலை நிறுத்தத்தில் பங்கேற்க உள்ளனர். BSNL நிறுவனம் தனியார் நிறுவனங்களோடு போட்டியிட்டு கம்பீரமாக நிற்கும் ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இந்த நிறுவனத்தை, மக்களின் சொத்தை, கொள்ளை அடித்து, ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தை வாழ வைக்க நினைக்கும் மோடி அரசின் கொள்கையை எதிர்த்து நடத்தக் கூடிய வேலை நிறுத்தம் இது.

## காற்றில் பறந்த தொலை தொடர்பு அமைச்சரின் வாக்குறுதிகள்

டிசம்பர் 12 மற்றும் 13, 2017 ஆகிய தேதிகளில் வேலை நிறுத்தம் நடைபெற்றது எதற்காக?

- BSNL ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் 01.01.2017 முதல் ஊதிய மாற்றம்.
- BSNL நிறுவனத்திற்கு 4G ஸ்பெக்ட்ரம் வழங்க வேண்டும்
- BSNL ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதிய மாற்றம் தர வேண்டும்.
- BSNL அரசிற்கு வழங்கும் ஓய்வூதிய பங்கீட்டை வாங்கும் சம்பளத்தின் அடிப்படையில் வழங்க வேண்டும்.
- 2வது ஊதிய மாற்றக்குழுவின் விட்டுப்போன பரிந்துரைகளை அமலாக்க வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளுக்காகவே 98 சதவிகித ஊழியர்களும், அதிகாரிகளும் பங்கு பெற்ற இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றது.

நாடு முழுவதும் 200க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில ஆளுநர்கள் ஆகியோரை சந்தித்து மனுக்கள் கொடுக்கப்பட்டது. தொலை தொடர்பு அமைச்சரை, சென்னை, ஜெய்பூர், ராய்பூர் மற்றும் சங்கிலி உட்பட பல நகரங்களில் சந்தித்து அங்குள்ள தொழிற்சங்க தலைவர்களால் இதே மனு கொடுக்கப்பட்டது.

தேசப்பிதா மகாத்மா காந்தியின் நினைவு தினமான ஜனவரி 30 முதல் ஐந்து நாட்கள், நடைபெற்ற சத்தியாகிரகம், மனித சங்கிலி இயக்கம், தர்ணா என அனைத்து போராட்டங்களையும், மோடி அரசு உதாசீனப்படுத்தியது. எந்த பேச்சு வார்த்தையும் நடைபெறவில்லை. முத்தாய்ப்பாக, கொதிப்படைந்த பல்லாயிரக்கணக்கான ஊழியர்களை திரட்டி டெல்லியில் பிப்ரவரி 23, 2018 அன்று பாராளுமன்றம் நோக்கிய பேரணி மிகவும் எழுச்சிகரமாக நடைபெற்றது. அதன் விளைவாக, பிப்ரவரி 24ஆம் தேதி மத்திய தொலை தொடர்பு அமைச்சர் முன்னிலையில் DOT செயலாளர், BSNL CMD உட்பட உயர் மட்ட அதிகாரிகளுடன் நமது AUAB தலைவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினர்.

நமது கோரிக்கைகளின் நியாயத்தை உணர்ந்த தொலை தொடர்பு அமைச்சர் ஐந்து அம்ச கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு விரைவில் தீர்த்து வைப்பதாக வாக்குறுதி கொடுத்தார். மேலும், DOT செயலாளர் அவர்கள் இதற்கான குறிப்புகளை தயார் செய்து உடனடியாக வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார். ஆனால் ஒன்பது மாதகாலமாக எதுவும் நடக்கவில்லை.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல், கொடுத்த வாக்குறுதிகளுக்கு மாறாக, ஊதிய மாற்றம் 4G ஸ்பெக்ட்ரம் உள்ளிட்ட அனைத்து பிரச்சனைகளிலும், "கொடுக்கக்கூடாது" என்ற ஒற்றை அம்ச நோக்கத்தோடு, DOT செயலாளர் BSNLக்கு விளக்கம் கேட்டு 06.11.2018 அன்று ஒரு கடிதம் எழுதியுள்ளார். இது மாபெரும் நம்பிக்கை துரோகமாகும்.

## 4G ஸ்பெக்ட்ரம்

ஜியோ, ஏர்டெல், வோடோபோன் ஆகிய தனியார் நிறுவனங்கள் 4G சேவையை 2016 முதல் வழங்கி வருகின்றன. BSNL நிறுவனத்திற்கு மட்டும், இதுவரை 4G ஸ்பெக்ட்ரம் வழங்கப் படவில்லை. கண்ணையும், கையையும் கட்டி போட்டு தனியாரோடு போட்டி போடு என மோடி அரசு சொல்கிறது. இது அப்பட்டமான கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மோடி அரசு வழங்கும் அதீத சலுகையாகும். மக்கள் மத்தியில், BSNL சேவை மோசம் என்ற எண்ணத்தை விதைக்கவே மோடி அரசு விரும்புகிறது. இதை ஒருபோதும் ஏற்க மாட்டோம் என்பதால் தான் இந்த வேலை நிறுத்தம் நடைபெற இருக்கிறது. ஏர்டெல் நிறுவனம் பொதுத் துறை வங்கிகளில் 1,13,000 கோடி ரூபாய்களையும், வோடோபோன் ஐடியா நிறுவனம் 1,20,000 கோடி ரூபாய்களையும் வாங்கி செயல்பட்டு வரும்போது இந்திய அரசுக்கு முழுமையாக சொந்தமான BSNL நிறுவனம் தனது செயல்பாடுகளுக்கு வங்கிகளில் கடன்களை வாங்க DOT தடை விதித்துள்ளது என்பது இந்த நிறுவனத்தை முடக்கும் நோக்கமே தவிர வேறு ஏதும் இல்லை.

## ஓய்வூதிய மாற்றம்

இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட BSNL ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். BSNL நிறுவனம் உருவானபோது பென்சன் விதிகள் 37(A) உருவாக்கப்பட்டு, மத்திய அரசே BSNL ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்க உத்தரவு வெளியிடப்பட்டது. ஓய்வூதிய மாற்றம் வழங்க வேண்டியது மத்திய அரசின் கடமையாகும். 7வது மத்திய ஊதியக்குழு ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய மாற்றத்தை வழங்கிய பின்பு, BSNL ஓய்வூதியர்களுக்கு வழங்காதது அநீதியாகும்.

## வாங்கும் ஊதியத்தில் ஓய்வூதிய பங்கீடு

BSNL ஓய்வூதியதாரர்களுக்கு, ஓய்வூதியம் கொடுக்க மத்திய அரசுக்கு BSNL நிறுவனம் ஓய்வூதிய பங்கீடு தரவேண்டும். இந்த பங்கீடு என்பது வாங்கும் சம்பளத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும் என மத்திய அரசு உத்தரவு வெளியிட்டு விட்டது. ஆனால் DOT இந்த உத்தரவை அமல்படுத்தாமல் ஊதிய விகிதத்தின் இறுதி நிலை ஊதியத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்து BSNL கழுத்தை அறுக்கிறது. இதன் விளைவாக பல ஆயிரம் கோடி ரூபாய்கள் தேவையின்றி BSNLக்கு செலவாகிறது.

## 2வது ஊதிய மாற்றக்குழுவின் விட்டுப்போன பரிந்துரைகளை அமலாக்கு

BSNL நிறுவனத்தில் நேரடி நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு சட்டப்படி வழங்கப்பட வேண்டிய 30% ஓய்வூதிய பலன்கள் உட்பட இரண்டாவது ஊதிய மாற்றக் குழுவில் பரிந்துரைக்கப்பட்டு, ஆனால் இதுவரை அமலாக்கப்படாத அனைத்து பிரச்சனைகளையும் தீர்வு காண வேண்டும்.

***தோழர்களே,***

***இந்த காலவரையற்ற வேலை நிறுத்தம் மிக மிக அவசியமானதாகும். BSNL நிறுவனம் வளரவும், ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளுக்காகவும், இந்த வேலை நிறுத்தம் மிகுந்த அவசியமாகிறது. நமது கோபக்கனலில் ஆட்சியாளர்களுடைய அதிகார கோட்டைகள் தகரட்டும். இது தேசம் காக்க நடத்தப்படும் வேலை நிறுத்தம். நாம் அனைவரும் பங்கேற்போம். நமது கோரிக்கைகளை வென்றடைவோம்.***

■

BSNLEU

## உள்ளே...


| | |
|---|---|
| வேலை நிறுத்தம்.... | 1 |
| DO OR DIE | 2 |
| G.வீரையன் மறைந்தார் | 4 |
| புரட்டிப் போட்ட கஜா புயல் | 5 |
| நிர்வாகிகள் கூட்ட முடிவுகள் | 6 |
| பங்கு விற்பனையில் மோடி.... | 7 |
| 37ஆவது தேசியக்கவுன்சில் .... | 8 |
| 9வது அகில இந்திய மாநாடு | 9 |
| மாவட்ட மாநாடு | 10 |
| சபரிமலை ஐயப்பனை | 11 |
| DOT செயலாளருடன்... | 12 |
| AUABயின் அமைப்பு நிலை | 13 |
| வங்கிகளில் இருந்து கடன் | 14 |
| போராட்டம் மாபெரும் வெற்றி | 15 |
| பணி ஓய்வு | 16 |
| ஆணவக் கொலைகளுக்கு... | 17 |
| வெண்மணி-50 | 18 |
| தர்ணா போராட்டம் | 19 |
| பேரணி காட்சிகள் | 20 |

# தஞ்சையின் தவப்புதல்வன் தோழர் G.வீரையன் மறைந்தார்



தமிழக விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர் இயக்கங்களின் மகத்தான தலைவர் தோழர் G.வீரையன் 2018, நவம்பர் 18ஆம் தேதி அதிகாலை 5 மணியளவில் காலமானார். 1932, நவம்பர் 20ஆம் தேதி திருவாரூர் மாவட்டம் குடவாசல் அருகிலுள்ள சித்தாடி என்ற கிராமத்தில் சிறு குத்தகை விவசாயக் குடும்பத்தில் பிறந்த தோழர் வீரையன் 4ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர். இளம் வயதிலேயே சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்டிருந்த அவர் பொதுவுடமை சித்தாந்தால் ஈர்க்கப்பட்டு, தன்னுடைய வாழ்நாள் முழுவதும் விவசாயிகளுக்காகவும், விவசாயத் தொழிலாளர்களுக்காகவும் தீண்டாமைக்கொடுமைக்கு எதிராகவும், பல்வேறு போராட்டங்களை நடத்தியவர். அந்த போராட்டங்களின் காரணமாக பலமுறை சிறை சென்றவர்.

1968ல் நடைபெற்ற வெண்மணி கொடுமைகளுக்கு பின்னர் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் முழுவதும் சுற்றி சுழன்று பணியாற்றி உறுதியாக போராடியதின் விளைவாக அந்த மாவட்ட விவாசாயிகளுக்கும் விவசாய தொழிலாளர்களுக்கும் பல்வேறு உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுத் தந்தார். அவசர நிலைக்காலத்தில் தலைமறைவு வாழ்க்கையிலும் ஈடுபட்டார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் மாநில தலைவராக, மாநில செயலாளராக, அகில இந்திய நிர்வாகக் குழு உறுப்பினராக என பல பொறுப்புகளில் மிகச்சிறப்பாக பணியாற்றியவர் அவர். தமிழக விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் பிரச்சனை குறித்தும் பாசனப் பிரச்சனைகள் குறித்தும் மிகத் தெளிவாக அறிந்தவர் அவர். காவிரி நடுவர் மன்றம் தமிழகத்திற்கு வருகை தந்தபோது விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களை பல்லாயிரக்கணக்கில் திரட்டி முறையிட வைத்தார்.

1984 மற்றும் 1989 - ஆண்டுகளில் நாகப்பட்டினம் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு திறம்பட பணியாற்றினார். தமிழக அரசு அமைத்த வேளாண் உயர்மட்டக் குழுவில் உறுப்பினராக செயலாற்றினார். மேலும், விவசாயத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட குறைந்தபட்ச கூலி நிர்ணயக்குழுவிலும் பணியாற்றினார். சங்கம் படைத்த சாதனை, வெண்மணித் தீ , விவசாய சங்க வீர வரலாறு உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை "செங்கொடியின் பாதையில் நீண்ட பயணம்" என்ற தலைப்பில் நூலாக எழுதியுள்ளார்.

தஞ்சையின் மிகப்பெரிய தியாகி N.வெங்கடாசலம் படுகொலை செய்யப்பட்ட பின் அவரது மூன்று குழந்தைகளையும் எடுத்துச் சென்று வளர்த்து படிக்க வைத்தவர் தோழர் வீரையன்.

60 ஆண்டுகாலத்திற்கு மேல் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட அவர் தனது 86ஆவது வயதின் இறுதியில் காலமானார் என்பது பொதுவுடைமை இயக்கத்திற்கும், விவசாய இயக்கம் மற்றும் விவசாயத்தொழிலாளர் இயக்கத்திற்கும், இந்திய உழைப்பாளி வர்க்கத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அருமை தோழர் G.வீரையனுக்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.

■

# டெல்டா மக்களின் வாழ்க்கையை புரட்டிப் போட்ட கஜா புயல்

நவம்பர் மாதம் 15ஆம் தேதி கரையைக் கடந்த கஜா புயல் டெல்டா மாவட்டங்களில் கடுமையான சேதத்தை விளைவித்துள்ளது. நாகை, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்ட மக்களின் வாழ்க்கையை கடுமையாக பாதித்து விட்டது. பல ஆண்டுகளுக்கு பின் டெல்டா மாவட்டங்களுக்கு காவிரி நீர் வந்த காரணத்தால் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருந்தது. ஆனால் அத்தனையையும் இந்த கஜா புயல் நாசமாக்கி விட்டது. நம்முடைய ஒப்பந்த ஊழியர் பக்கிரிசாமி உட்பட பல உயிர் இழப்புகளும் ஏற்பட்டுள்ளது. அந்த மாவட்டங்களில் பெரும்பாலான வீடுகளின் கூரைகள் பிய்த்து எறியப்பட்டது. வீடுகளின் மீது மரங்கள் விழுந்து தரைமட்டமாகி விட்டது. பல நாட்கள் மக்கள் வீட்டை விட்டு வெளியே வரமுடியாத அளவிற்கு வீடுகளின் முன்பும், சாலைகளிலும், வழிகளிலும் மரங்கள், மின் கம்பங்கள் சாய்ந்து போக்கு வரத்தும் துண்டிக்கப்பட்டது. மீனவர்களின் படகுகள் முற்றிலும் நாசமடைந்து விட்டது. பல பத்தாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டிருந்த வாழை, கரும்பு, முந்திரி, சோளம், நெல் ஆகிய பயிர்கள் நாசமாகி விட்டது. நீண்ட காலமாக தங்களுக்கு வாழ்வாதாரமாக இருந்த தென்னை, தேக்கு, முந்திரி, மா, பலா மரங்கள் வேரோடு பிடுங்கி எரியப்பட்டுள்ளது. இந்த மரங்கள் எல்லாம் பல பத்தாண்டுகளாக வளர்க்கப்பட்டவை நாசமாகி போனதால் இவர்களின் வாழ்க்கை கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் பின்னோக்கி போயுள்ளது. அந்த மக்களின் விவசாயத்திற்கு அடுத்த வாழ்வாதாரமாக இருந்த கோழி, ஆடு, மாடு போன்றவை பல்லாயிரக்கணக்கில் மடிந்து போனது அவர்களின் வாழ்க்கையை மிகப்பெரிய அளவிற்கு பாதிப்பிற்கு உள்ளாக்கியுள்ளது. ஆயிரக்கணக்கான சிறு வியாபாரிகள் தங்களின் முதலீட்டை முழுமையாக இழந்துள்ளனர். பல நாட்கள் உடுத்த உடை கூட இல்லாத சூழல். குடிநீர், உணவு கிடைக்காமல், மிகுந்த வேதனையில் தவித்தனர். மின்சாரமும், தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டன. இந்த முறையும் பொதுத்துறை நிறுவனமான BSNL தான் தடையின்றி சேவைகளை கொடுத்தது என்பது நம்மை பெருமிதம் கொள்ளச் செய்துள்ளது. நமது தோழர்கள் தங்களின் துயரத்தையும் மறந்து அந்த பகுதி மக்களுக்கு தொலை தொடர்பு சேவைகளை உடனடியாக சரி செய்தனர். சாலை வசதி இல்லாத பகுதிகளுக்கும் தள்ளுவண்டி மூலமாக டீசல் கொண்டு சென்று கோபுரங்களை இயக்கச் செய்தனர்.

இந்த முறை புயல் வரும் முன் அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஜூரூராக எடுக்கப்பட்டுள்ளதாக சொன்னதெல்லாம் வழக்கம் போன்ற நடவடிக்கைகள் தான். அதிலும் ஒரு சில அமைச்சர்களின் வாய் சவடால்கள், நொந்து போய் அடுத்து என்ன என்ற பெரிய கேள்விக்குறியோடு இருந்த மக்களுக்கு எரிச்சல் ஊட்டக் கூடியதாகவே இருந்தது. ஜெனரேட்டர் ஏற்பாடு செய்வது, பொக்லைன் இயந்திரங்களை முன்கூட்டியே கொண்டு வந்து நிறுத்துவது, புதிய மின் கம்பங்கள், டிரான்ஸ்பார்மர்கள் கொண்டு வருவது, குடிதண்ணீர் கேன்களை சேகரித்து வைத்திருப்பது, மெழுகுவர்த்தி, அவசர நிலை விளக்கு, அரிக்கேன் விளக்கு, மண்ணெண்ணெய், தீப்பெட்டி, நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும் பால் பாக்கெட், குழந்தைகளுக்கான உணவு பண்டங்கள், பால் பவுடர்கள், பாய்கள், தார்ப்பாலின், உடைகள், மருந்து பொருட்கள் என இவற்றையெல்லாம் முன்கூட்டியே செய்திருக்க வேண்டும். ஆனால் புயல் கடந்து சில நாட்கள் வரை அவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வந்து சேரவில்லை.

தமிழகத்தில் இந்த முறையும் பொதுமக்களும், தன்னார்வலர்களும், தொண்டு நிறுவனங்களும் உதவி செய்திருந்த போதும், அவை அந்த மக்களின் துயர் துடைக்கும் அளவிற்கு துவக்கத்தில் போதுமானதாக இல்லை. ஆனால் அத்தகைய பணிகள் தற்போது கூடுதல் வேகம் எடுத்துள்ளன.

தமிழ் மாநிலத்தில் BSNL ஊழியர்கள் பல இடங்களில் தாங்களாகவே முன்வந்து அங்கு நிவாரணப் பொருட்களை அனுப்பியுள்ளனர். தமிழ் மாநில சங்கமும் அதற்கான முயற்சிகளை எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களில் நாமும் பங்கு கொள்வோம். ■

# தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள்

BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டம் 19.11.2018 அன்று மாநில தலைவர் தோழர் S.செல்லப்பா AGS அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கீழ தஞ்சையில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அயராது பாடுபட்ட அருமைத் தோழர் G.வீரையன், மின் விபத்தால் உயிரிழந்த குடந்தைக் கோட்டத்தை சார்ந்த தோழர் பக்கிரி மற்றும் இந்தக் காலக் கட்டத்தில் உயிரிழந்த தோழர்களின் மறைவிற்கு தோழர் S.சுப்ரமணியன் ACS அவர்கள் அஞ்சலி தீர்மானம் வாசித்த பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் தனது அஞ்சலியை தெரிவித்துக் கொண்டது. தோழர் K.சீனிவாசன் CT வந்திருந்த அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

தோழர் S.செல்லப்பா AGS அவர்களின் தலைமையுரைக்கு பின் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் CS ஆய்படு பொருட்களை விளக்கி பேசினார். தோழர் S.செல்லப்பா நடைபெற உள்ள டிசம்பர் 3ஆம் தேதியிலிருந்து நடைபெற உள்ள கால வரையற்ற வேலை நிறுத்தத்தின் அவசியம் தொடர்பாகவும், நடத்த வேண்டிய விதம் தொடர்பாகவும், தமிழ் மாநில AUAB கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் விளக்கி உரை நிகழ்த்தினார். அதற்கு பின் பங்கேற்ற அனைத்து மாநில சங்க நிர்வாகிகளும் அந்த ஆய்படு பொருட்களின் மீது விவாதம் நடத்தினர். தோழர்களின் விவாதத்திற்கு பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

■ அனைத்து மாவட்டங்களிலும் உடனடியாக அகில இந்திய AUAB அறைகூவலான டிசம்பர் 3 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட வேண்டும்.

■ அந்த வேலை நிறுத்த பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக தமிழ் மாநில AUABயின் முடிவின் படி நவம்பர் 22,26,27,28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் நடைபெற வேண்டிய யின் முடிவின் படி நவம்பர் 22,26,27,28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் AUAB சார்பாக திட்டமிடப்பட்டுள்ள அனைத்து சங்க சிறப்பு கூட்டத்தை அனைத்து சங்கங்களையும் இணைத்து வெற்றிகரமாக நடத்திட வேண்டும்.

■ போராட்டத்தின் முக்கியத்துவத்தைக் கணக்கில் கொண்டு ஒவ்வொரு ஊழியரையும் அதிகாரிகளையும், தேவைப்பட்டால் வீடுகளுக்கு சென்றுகூட சந்தித்து பேசி வேலை நிறுத்தத்தில் ஈடுபட செய்திட திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

■ தமிழகத்தின் அனைத்து தொலைபேசி நிலையங்கள் மற்றும் அலுவலகங்களில் வேலை நிறுத்த அறிவிப்புடன் கூடிய ஃப்ளக்ஸ் பேனர்களை உடனடியாக நிறுவிட வேண்டும்.

■ டிசம்பரில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் கிடைத்திட்ட அனுபவத்தைக் கணக்கில் எடுத்து தற்போது கூடுதல் கவனம் செலுத்திட வேண்டும்.

■ இந்த வேலை நிறுத்த போராட்டத்திற்கு மும்முரமாக செயல்படவேண்டி இருப்பதால் நமது மாநிலத்தில் நடைபெற வேண்டிய கிளை மற்றும் மாவட்ட மாநாடுகளை வேலை நிறுத்தத்திற்கு பின்னர் நடத்திக் கொள்ளலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

■ மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள அகில இந்திய மாநாட்டு சார்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் விவரங்களை மாநில சங்கத்திற்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

■ தமிழ் மாநில AUABயில் இருந்து ஒரு சுவரொட்டி மற்றும் இரண்டு வகையான நோட்டீஸ்கள் வெளியிடப்படும். இது தவிர கிளை/மாவட்ட சங்கங்கள் தங்களின் தேவைகளுக்கு ஏற்ப சுவரொட்டி மற்றும் நோட்டீஸ்கள் தயாரிக்க வேண்டும்.

வலுவான ஒன்று பட்ட போராட்டத்தின் மூலமாக மட்டுமே நமது கோரிக்கைகளை வென்றடைய முடியும் என்ற உணர்வுடன் தயாரிப்பு பணிகளை செம்மையாக மேற்கொள்வோம். ஊதிய மாற்றம் நமது உரிமை!! BSNL நிறுவனம் காப்பது நமது கடமை!! என்ற லட்சியத்துடன் இந்த போராட்டத்தை வெற்றிகரமாக்குவோம்.

ஒரு குறுகிய காலை இடைவெளியில் அறிவிப்பு கொடுக்கப்பட்ட போதும் நமது மாநில சங்க நிர்வாகிகள் பங்கேற்றது சிறப்பம்சம். இந்த மாநில செயற்குழுவின் மதிய உணவை அக்டோபர் மாத இறுதியில் பணி ஓய்வு பெற்றுள்ள நமது மாநில உதவி செயலாளர் தோழர் R.மெய்யப்பன் கிறிஸ்டோபர் அனைவருக்கும் வழங்கினார்.

மேலும் கஜா புயலின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டி இருப்பதால் அதற்கான நிதியினை திரட்டிட மாவட்ட சங்கங்களுக்கு தமிழ் மாநில சங்கம் ஏற்கனவே அறைகூவல் விடுத்துள்ளது. அதனை உடனடியாக திரட்டி மாநில சங்கத்திற்கு உடனடியாக அனுப்பிட வேண்டும் என்றும் இந்த மாநில நிர்வாகிகள் கூட்டம் கேட்டுக் கொண்டது. நமது தமிழ் மாநில உதவி செயலாளரும், அகில இந்திய BSNL WWCC அமைப்பாளருமான தோழர் P.இந்திரா அவர்கள் உடனடியாக ரூ.5,000/- அனுப்பி வைத்துள்ளார். நமது மாநில உதவி செயலாளர் தோழர் R.மெய்யப்பன் கிறிஸ்டோபர் அவர்கள் ரூ.1,000/- மற்றும் நமது மாநில அமைப்பு செயலாளர் தோழர் K.சீதாலஷ்மி அவர்கள் ரூ.500/-ம் உடனடியாக நன்கொடை வழங்கி உள்ளனர். நாம் செய்யும் உதவியை காலத்தே செய்ய வேண்டும் என்பதை கணக்கில் கொண்டு உடனடியாக மாநில சங்கத்திற்கு அந்த நிதியை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

டிசம்பர் 3ஆம் தேதி முதல் நடைபெற உள்ள காலவரையற்ற வேலை நிறுத்தத்தை தமிழகத்தில் முழுமையாக வெற்றி பெறச் செய்வது என்ற சூளுரையுடன் நிறைவு பெற்ற இந்த மாநில நிர்வாகிகள் கூட்டத்தை மாநில சங்கத்தின் அமைப்பு செயலாளர் தோழர் K.பழனிகுமார் அவர்கள் நன்றி கூறி முடித்து வைத்தார். ■

# பங்கு விற்பனையில் மோடி அரசின் வேகம்

தனியார் மயமாக்கல் கொள்கையினை மத்திய மோடி அரசாங்கம் காட்டும் வேகம் அசுரத்தனமாக உள்ளது. தற்போது இந்து நாளிதழ் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் நமக்கு அதிர்ச்சி ஊட்டக் கூடியதாக உள்ளது.

நாசகர புதிய பொருளாதரக் கொள்கை அமலாக்க துவங்கிய 1991ஆம் ஆண்டிலிருந்து 2018ஆம் ஆண்டு வரை பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்றதின் மூலம் மத்திய அரசு பெற்றிருக்கக் கூடிய தொகை 3.63 லட்சம் கோடி ரூபாய்கள். அதில் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 2.1 லட்சம் கோடி ரூபாய்களுக்கு பொதுத்துறைகளின் பங்குகள் விற்பனை செய்யப்பட்டுள்ளனவாம். இந்த ஆண்டு விற்பனை செய்ய நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 80,000 கோடி ரூபாய்களாம். அதில் தற்போது வரை 15,247.11 கோடி ரூபாய்கள் தான் அடைந்துள்ளனராம். இந்த நிதி ஆண்டு முடிய இன்னமும் ஐந்து மாதங்கள் உள்ளன. கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 72,500 கோடி ரூபாய்கள். ஆனால் அரசு 1.00.056.91 கோடி ரூபாய்களுக்கு பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்துள்ளதாம்.

ஒரு புள்ளி விவரம் உங்கள் பார்வைக்கு:-

| அரசாங்கம் | பங்கு விற்பனை செய்யப்பட்ட தொகை கோடி ரூபாய்களில் | சதவிகிதத்தில் |
|---|---|---|
| 1991-96 காங்கிரஸ் | 9,961.83 | 2.75 |
| 1996-98 ஐக்கிய முன்னணி | 1,289.67 | 0.36 |
| 1998-04 தேசிய ஜனநாயக கூட்டணி-1 | 33,655.59 | 9.28 |
| 2004-09 ஐக்கிய முற்போக்கு கூட்டணி-1 | 8,515.94 | 2.35 |
| 2009-14 ஐக்கிய முற்போக்கு கூட்டணி-2 | 99,367.46 | 27.40 |
| 2014-18 தேசிய ஜனநாயக கூட்டணி-2 | 2,09,896.11 | 57.87 |
| மொத்தம் | 3,62,686.60 | 100 |

இதில் நாம் பார்க்க வேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில் இடது சாரிகளின் ஆதரவோடு ஆட்சியில் இருந்த ஐக்கிய முன்னணி ஆட்சியில் வெறும் 0.36% பங்கு விற்பனை தான் செய்யப்பட்டுள்ளது. வாஜ்பாய் தலைமையிலான பாஜக ஆட்சியில் அது 9.28%ஆக உயர்ந்தது. மீண்டும் இடதுசாரிகளின் ஆதரவோடு ஐக்கிய முற்போக்கு கூட்டணி-1 ஆட்சி காலத்தில் அது 2.35%ஆக குறைந்தது. இடதுசாரிகளின் ஆதரவு இல்லாத ஐக்கிய முற்போக்கு கூட்டணி-2 ஆட்சி காலத்தில் அது 27.40%ஆக உயர்ந்தது. தற்போது ஏழைத் தாயின் மகன் என்று கூறிக்கொள்ளும் மோடி அரசாங்கத்தில் மன்மோகன் ஆட்சி காலத்தை விட இரட்டிப்பு மடங்காக 57.87% ஆக மாறியுள்ளது.

யார் பொதுத்துறை நிறுவனங்களின் பாதுகாவலர்கள் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள் ■

# 37 ஆவது தேசியக்கவுன்சில் கூட்டத்தின் சிறப்பம்சங்கள்

37 ஆவது தேசியக்கவுன்சில் கூட்டம் 20.11.2018 அன்று மனிதவள இயக்குனர் திருமிகு சுஜாதா ரே அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் விவாதங்கள் சுமுகமான முறையில் நடைபெற்றது. இந்தக் கவுன்சிலின் சிறப்பம்சங்கள் மட்டும் கீழே தரப்பட்டுள்ளது. விரிவான குறிப்பு பின்னர் வெளியிடப்படும்.

■ **ஊழியர்களின் ஊதிய மாற்றம்:**-வீட்டு வாடகைப்படியை முடக்குவது என்று நிர்வாக தரப்பு வலியுறுத்துவதால் ஊழியர்களுக்கான ஊதிய மாற்ற பிரச்சனை நின்று போயுள்ளதை ஊழியர் தரப்பு தலைவர்கள் சுட்டிக் காட்டினார்கள். நிர்வாகத்தின் இந்த முடிவை ஊழியர் தரப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. பேச்சு வார்த்தை மீண்டும் துவங்கப்பட்டு வீட்டு வாடகைப்படி மாற்றத்தையும் உள்ளடக்கி, கால தாமதமின்றி உடன்பாடு கையெழுத்திடப்பட வேண்டும் என வலிமையாக ஊழியர் தரப்பு தலைவர்கள் கோரினர். அந்தக் கோப்பினை தான் இதுவரை பார்க்கவில்லை என்று பதிலளித்த தேசியக்கவுன்சில் தலைவர் இதில் தேவையானவற்றை செய்வதாக உறுதி அளித்துள்ளார்.

■ **JE இலாகா தேர்வை OFF LINE மூலம் நடத்துவது:**- அனைத்து NON EXECUTIVE TO NON EXECUTIVE தேர்வுகளும் OFF LINE மூலமே நடத்த வேண்டும் என்கிற ஊழியர் தரப்பின் வாதத்தை தேசியக் கவுன்சிலின் தலைவர் ஏற்றுக் கொண்டார். இது தொடர்பாக GM(Rectt) யோடு விவாதிப்பதாக உறுதி அளித்தார்.

■ **ஊழியர்களுக்கும் VOLUNTARY TERM INSURANCE:**- இது தற்போது அதிகாரிகளுக்கு மட்டும் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. ஊழியர்கள் விருப்பப்பட்டால் அவர்களுக்கும் அது அமல்படுத்தப்பட வேண்டும் என்பதே ஊழியர் தரப்பின் கோரிக்கை. இதனை மார்ச் 2019 முதல் ஊழியர்களுக்கும் அமலாக்கப்படும் என GM(Rectt) உறுதி அளித்தார்.

■ **காசுவல் ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம்:**- நிரந்தர ஊழியர்களின் ஊதிய மாற்றத்தோடு காசுவல் ஊழியர்களின் ஊதிய மாற்றம் இணைக்கப்படக் கூடாது என்கின்ற ஊழியர் தரப்பின் கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட தேசியக்கவுன்சிலின் தலைவர், இந்த பிரச்சனையை விரைவு படுத்தப்படுவதை கவனிப்பதாக உறுதி அளித்தார்.

■ **நேரடி நியமன ஊழியர்களுக்கு ஓய்வூதிய பலன்கள்:**- CMD BSNL மற்றும் DIRECTOR(HR) ஆகியோர், நிர்வாகம் வழங்க வேண்டிய ஓய்வூதிய பங்கீட்டை அதிகரிக்க கொடுத்த உறுதிமொழிகள் அமலாக்கப்படாமல், தேவையற்ற காலதாமதம் செய்யப்படுவதாக ஊழியர் தரப்பு தலைவர்கள் புகார் கூறினார்கள். இந்த பிரச்சனை அக்கறையுடன் கவனிக்கப்படும் என தேசியக்கவுன்சிலின் தலைவர் உறுதி அளித்தார்.

■ **TT இலாகா தேர்வில் தளர்வு:**- பத்தாம் வகுப்பு கல்வி தகுதி இல்லாத ஊழியர்கள் TT இலாகா தேர்வு எழுதுவதற்கு ஒரு கட்ட தளர்வு வழங்க வேண்டும் என ஊழியர் தரப்பு தலைவர்கள் உறுதியாக கோரினர். இதனை பரிசீலிக்க தேசியக் கவுன்சிலின் தலைவர் உறுதி அளித்துள்ளார்.

■ **காசுவல் ஊழியர்கள் பணி நிரந்தரம்:**- சமீபத்திய உச்சநீதிமன்ற தீர்ப்பின் வெளிச்சத்தில் விடுபட்ட காசுவல் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என ஊழியர் தரப்பு தலைவர்கள் கோரினார்கள். இது தொடர்பாக சட்ட வல்லுனர் கருத்தைக் கேட்பதாக தேசியக் கவுன்சிலின் தலைவர் உறுதி அளித்துள்ளார்.

■ **SENIOR HINDI TRANSLATOR மற்றும் RAJBAHA ATHIKARI ஆகிய INTERNAடு தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்:**- இந்தக் கேடர்களின் மறுசீரமைப்பு சமீபத்தில் தான் நிறைவு பெற்றுள்ளதாக தெரிவித்த நிர்வாகம், காலிப்பணியிடங்களை கணக்கீடு செய்து, விரைவில் இந்த INTERNAL தேர்வுகள் நடத்தப்படும் எனவும் தெரிவித்தது. ■

# BSNL ஊழியர் சங்கத்தின் 9வது அகில இந்திய மாநாடு

BSNL ஊழியர் சங்கத்தின் 9வது அகில இந்திய மாநாடு கர்நாடக மாநில மைசூரில் 2018, டிசம்பர் 17 முதல் 20 வரை நடைபெற உள்ளது. முன்னதாக நமது 9வது அகில இந்திய மாநாடு 2019, ஜனவரி 8 முதல் 11 வரை நடைபெறுவதாக இருந்தது. இந்திய நாட்டின் உழைக்கும் வர்க்கம் மத்திய அரசின் நாசகர பொருளாதார கொள்கைகளை எதிர்த்து 2019, ஜனவரி 8 மற்றும் 9ஆம் தேதிகளில் நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளது. அதில் பங்கேற்பது நமது வர்க்கக் கடமை என்ற அடிப்படையில் நமது மத்திய சங்கம் இந்த 9வது மாநாட்டினை முன் கூட்டியே நடத்துவது என்று மிகச்சரியாக முடிவெடுத்துள்ளது.

BSNL ஊழியர் சங்கத்தை பொறுத்த வரை தனது ஜனநாயக செயல்பாடுகளை உயர்த்தி பிடிக்கும் வகையில் குறித்த நேரத்தில் நமது அகில இந்திய மாநாடுகளை நடத்தி வருகின்றது என்பது பாராட்டத் தக்கது.

மத்தியில் ஆளுகின்ற அரசாங்கங்கள், பொதுத்துறை நிறுவனத்தின் பங்குகளை எல்லாம் கூறு போட்டு விற்று வருகின்ற இந்த தனியார்மய காலக் கட்டத்தில் நமது BSNL நிறுவனத்தின் ஒரு சதவிகித பங்குகளைக் கூட தனியாருக்கு தாரைவார்க்க அனுமதிக்காமல் அரசின் அந்த முயற்சிகளுக்கு எதிராக அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகள் சங்கங்களையும் இணைத்து போராடி காத்து வருவது BSNL ஊழியர் சங்கம்.

மத்திய ஆட்சியாளர்களின் தாராளமயக் கொள்கைகளால் இந்த நிறுவனம் நலிவடைந்த நேரத்தில் அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகள் சங்கங்களையும் ஒன்றிணைத்து இந்த நிறுவனத்தின் புத்தாக்கத்திற்காக தொடர்ச்சியாக போராடி வரும் சங்கம் நமது BSNL ஊழியர் சங்கம்.

நமது நிறுவனத்தை பாதுகாக்கும் அதே நேரத்தில் ஊழியர்களின் நியாயமான உரிமையான ஊதிய மாற்றத்தை அடைவதற்கு அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகள் சங்கங்களை ஒரே குடையில் கீழ் கொண்டு வந்து தொடர்ச்சியான, பல தரப்பட்ட இயக்கங்களை கண்டு வரும் சங்கம் BSNL ஊழியர் சங்கம்.

இது போன்ற பல்வேறு சாதனைகளை படைத்திட்ட BSNL ஊழியர் சங்கத்தின் 9வது அகில இந்திய மாநாட்டின் முதல் நாளான டிசம்பர் 17 காலையில் CITUவின் பொதுச் செயலாளர் தோழர் தபன் சென் துவக்கி வைக்க நமது சகோதர சங்கங்களின் தலைவர்கள் பங்கேற்கும் துவக்க நிகழ்ச்சியை நடத்த திட்டமிட்டுள்ளது. அதே போன்று அன்று மதியம் பல்லாயிரக்கணக்கான BSNL ஊழியர் சங்க தோழர்கள் பங்கேற்கும் பேரணியை நடத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. பேரணியின் இறுதியில் BSNLன் CMD திரு அனுபம் ஸ்ரீவாஸ்தவா உள்ளிட்ட உயர் அதிகாரிகளும், BSNLல் செயல்படும் அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகள் சங்கங்களின் பொதுச் செயலாளர்களும் கலந்துக் கொள்ளும் பொது அரங்கத்தையும் நடத்த திட்டமிட்டுள்ளது. பல்வேறு சிறப்பம்சங்கள் கொண்ட முதல் நாள் நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ள நமது சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் நமது மத்திய சங்கம் அறைகூவி அழைக்கிறது.

அடுத்த மூன்று நாட்களும் தேர்ந்தெடுக்கப் பட்ட சார்பாளர்களும், பார்வையாளர்களும் மட்டும் பங்கேற்கும் சார்பாளர் மாநாடு நடைபெற உள்ளது. சென்னையில் நடைபெற்ற 8வது அகில இந்திய மாநாட்டு முடிவுகள் அமலாக்கம், BSNLன் புத்தாக்கம், ஊதிய மாற்றம் மற்றும் இதர கோரிக்கைகளுக்காக நாம் நடத்திய போராட்டங்கள், அமைப்பு நிலை உள்ளிட்ட பல்வேறு ஆய்படு பொருட்களை விவாதிக்க உள்ளது அந்த மாநாடு. மேலும், நமது எதிர்கால திட்டங்களை வகுத்தெடுக்கும் இந்த மாநாடு வெற்றி பெற தமிழ் மாநில சங்கம் தனது வாழ்த்துக்களை உரித்தாக்குகிறது.

■

# எழுச்சியுடன் நடைபெற்ற CGM(P) பகுதி மாவட்ட மாநாடு

தமிழ் மாநில CGM ப்ராஜக்ட் பகுதியில் 3வேது மாவட்ட மாநாடு 20.11.2018 அன்று மாவட்ட தலைவர் தோழர் J.வளையாபதி தலைமையில் சென்னை CGM(P) அலுவலக வளாகத்தில் மிகவும் எழுச்சியுடன் நடைபெற்றது. நமது சங்கத்தின் செங்கொடியினை மூத்த தோழர் D.ஞானமூர்த்தி அவர்கள் முழக்கங்களுக்கு இடையே ஏற்றி வைத்தார்.

மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரையும் மாவட்ட செயலாளர் தோழர் S.K.புருஷோத்தம் அவர்கள் வரவேற்றார். தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் தனது துவக்க உரையில் CGM(P) மாவட்ட சங்கத்தின் செயல்பாட்டை பாராட்டியதுடன், BSNL நிறுவனம் இன்று சந்திக்கும் சவால்கள் மற்றும் அதனை நமது மத்திய சங்கம் அனைத்து ஊழியர் மற்றும அதிகாரிகள் சங்கங்களை இணைத்து பாதுகாத்து வருவதாக தொடர்பாக எடுத்துரைத்ததோடு, எதிர்வரும் டிசம்பர் 3ஆம் தேதி முதல் நடைபெற உள்ள காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் அனைத்து தோழர்களையும் பங்கேற்க செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதன் பின்னர் மாவட்ட செயலாளர் தோழர் S.K.புருஷோத்தம் முன்வைத்த செயல்பாட்டு அறிக்கையினையும், மாவட்ட பொருளாளர் தோழர் S.சத்தியநாராயணா முன்வைத்த வரவு செலவு அறிக்கையினையும் இந்த மாநாடு ஏற்றுக் கொண்டது.

BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய உதவி பொதுச்செயலாளர் தோழர் Sசெல்லப்பா தனது சிறப்புரையில், BSNL ஊழியர் சங்கத்தின் சாதனைகளை எடுத்துரைத்தோடு, டிசம்பர் 3 முதல் நடைபெற உள்ள BSNLல் உள்ள அனைத்து ஊழியர்களும், அதிகாரிகளும் பங்கு பெற உள்ள அகில இந்திய காலவரையற்ற வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகளான ஊதிய மாற்றம், ஓய்வூதிய மாற்றம், 4G ஸ்பெக்ட்ரம், ஓய்வூதிய பங்கீடு மற்றும் நேரடி நியமன ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பான நீண்டதொரு விளக்க உரை நிகழ்த்தினார்.

மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன், மாநில துணைத்தலைவர் தோழர் K.V.சிவகுமரன், முன்னாள் மாவட்ட செயலாளர் தோழர் சிவசந்திரன், SNEA மாவட்ட செயலாளர் தோழர் செல்வராஜ் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்துக் கொண்ட இந்த மாநாட்டினை வாழ்த்தி SNEA சங்கத்தின் முன்னாள் மாநில செயலாளர் தோழர் R.ராஜசேகர் வாழ்த்துரை வழங்கினார்.

இறுதியாக நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் மாவட்ட தலைவராக தோழர் J.வளையாபதி, மாவட்ட செயலாளராக தோழர் S.K.புருஷோத்தம், பொருளாளராக தோழர் S.சத்யநாராயணா உள்ளிட்ட நிர்வாகிகள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட தலைவர் தோழர் J.வளையாபதி நன்றி கூறி முடித்து வைத்தார்.

புதிய மாவட்ட சங்க நிர்வாகிகளின் செயல்பாடு சிறக்க தமிழ் மாநில சங்கம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. ■

## JTO இலாகா தேர்வு

31.03.2018 வரையிலான JTO காலிப்பணியிடங்களில் 50% இலாகா ஊழியர்களுக்கான தேர்விற்கான அறிவிப்பு 30.10.2018 அன்று வெளியிடப்பட்டது. அதன் படி 16.11.2018 முதல் 20.12.2018 வரை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் என்றும் 20.1.2019ல் ஆன்லைன் தேர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் ஒரு சில காரணங்களால் 2016-17ஆம் ஆண்டிற்கான காலிப்பணியிடங்களுக்கு மட்டும் அந்த தேர்வு என்றும், 2017-18க்கான காலிப்பணியிடங்களுக்கு மற்றொரு தேர்வு நடைபெறும் என்றும் கார்ப்பரேட் அலுவலகம் 15.11.2018ல் ஒரு உத்தரவின் மூலம் தெரிவித்துள்ளது.

# சபரிமலை ஐயப்பனை பெண்களும் தரிசிக்கலாம்
## – உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

கேரள மாநிலத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ளது சபரிமலை. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான பக்தர்கள் சென்று வழிபடும் பிரசித்தி பெற்ற கோவில் அது.

2018. செப்டம்பர் 28ஆம் தேதி இந்திய நாட்டின் உச்சநீதிமன்ற அமர்வு, சபரிமலைக் கோவிலுக்குள் 10 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ள பெண்கள் நுழைவதற்கு அனுமதி மறுப்பது, அரசமைப்புச் சட்டத்தின் 25(i)-ஆவது பிரிவின்கீழ் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையை மீறும் செயல் என்று தெளிவு படுத்தியிருக்கிறது. சபரிமலைக் கோவிலுக்குள்ளும் அனைத்துக் கோவில்களுக்குள்ளும் அனைத்து வயதுடைய பெண்களையும் அனுமதித்து அது தீர்ப்பு வழங்கியுள்ளது. உச்சநீதிமன்றம், மத நம்பிக்கை உரிமை என்பது, சமூகத்தின் பொது ஒழுங்கு, அறநெறி மற்றும் சமூக நலன்களுக்கு உட்பட்டதே என்று ஒரு பக்கம் கூறியுள்ள அதே சமயத்தில், அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளின் மூன்றாவது பத்தியில் கூறப்பட்டுள்ள ஷரத்துகளுக்கு உட்பட்டவைகளாகும் என்றும் பிரகடனம் செய்திருக்கிறது. வரலாறுபடைத்திடும் இத்தீர்ப்பானது, பாலின சமத்துவத்தை உத்தரவாதப்படுத்தியிருக்கிறது.

உண்மையான பக்தர்கள் மத்தியில் அது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் இணையதளத்தில் விக்கி பீடியாவில் சென்று பார்த்தால் 1991ஆம் ஆண்டு வரை கேரளத்தின் ஒரு சிறிய அளவிலான பெண்கள் தங்களின் குழந்தைகளுக்கு முதல் சோறு வழங்கும் 'சோறுண்ணு' சடங்கிற்காக இந்த கோவிலுக்கு சென்று வந்துள்ளதாகவும், குறிப்பாக 1940ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் தேதி திருவாங்கூர் மகாராணி கூட கோவிலில் ஐயப்பனை தரிசித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படி இருப்பினும், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை அமலாக்க வேண்டியது ஒரு மாநில அரசாங்கத்தின் அரசியல் அமைப்பு சட்டம் உருவாக்கியுள்ள கடமை. ஆனால் அங்கு ஒரு இடது சாரி அரசாங்கம் இருக்கின்ற காரணத்தாலேயே ஒரு சில மதஅடிப்படைவாத சக்திகள் அங்கு ஒரு பெரும் கலவரத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர். இதனை கடவுள் நம்பிக்கை இருப்பவர்களுக்கும், இல்லாதவர்களுக்குமான பிரச்சனையாக திசை திருப்ப முயற்சிக்கின்றன.

ஆனால் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் தான் கடவுள் நம்பிக்கை இருக்கின்ற தலீத்துகள் உள்ளிட்ட அனைவரையும் கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என பல இடங்களில் ஆலய நுழைவு போராட்டங்களை நடத்தியுள்ளனர் என்பதுதான் ஈவேரா பெரியார் காலம் தொட்டு சமீபத்திய தீண்டாமை ஒழிப்பு முன்னணி வரை நடைபெறுகிற வரலாறு. ஆனால் மத அடிப்படைவாதிகள் தான் பல்வேறு கதைகளை கூறி கடவுள் நம்பிக்கை இருக்கின்ற தலீத்துகளையும் பெண்களையும் கோவிலுக்கு அனுமதிக்க மறுக்கின்றனர் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

இந்த உச்ச நீதிமன்ற தீர்ப்பை எதிர்ப்பவர்கள் பெண்கள் உரிமைகளுக்கு எதிரானவர்களாகவே பேசி வருகின்றனர். வரலாற்றில் பெண்களுக்கு எதிராக இருந்த பல சட்டங்கள் மாற்றப்பட்டு வந்துள்ளன. கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறவேண்டும் இன்றிருந்த நம்பிக்கை இன்று காணாமல் போயிருந்தாலும், அதற்காக பாடுபட்ட ராஜாராம் மோகன்ராய் அன்றைய தினம் சந்தித்த மிரட்டல்களும், இன்னல்களும் ஏராளம். பெண்கள் தோள் சீலை உடுத்துவது கூட போராட்டங்களுக்கு பின் கிடைத்த உரிமைதான். பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் 33% இட ஒதுக்கீட்டை கூட்டணி கட்சிகளின் பெயரை ஒரு சில கட்சிகள் மறுத்தன. கடந்த நான்கரை ஆண்டு காலம் மெஜாரிட்டியுடன் ஆட்சி செய்து வருபவர்களும் அதனை அமலாக்க வில்லை. எனவே பெண்களின் உரிமைகளுக்கான போராட்டங்கள் தான் ஒரு விடிவை தரும்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பை அமலாக்கும் இடது முன்னணி அரசை கவிழ்க்க வேண்டும் என்கிற அரசியல் ஆதாயத்திற்காகவே இன்றைய சபரிமலை குழப்பங்கள் என்பதை சரியாகவே புரிந்துக் கொள்வோம். ■

# DOT செயலாளருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையும் அதற்கு எதிர்மறையான DOTயின் கடிதமும்

DOT செயலாளர், தொலை தொடர்பு துறையின் சார்பாக திருமிகு,அனுராதா மித்ரா (MEMBER/FINANCE), திரு,ரவிகாந்த் (MEMBER/SERVICES), திரு சிவசைலம் (SPECIAL SECRETARY) மற்றும் திரு காண்டேல்வால் JOINT SECRETARY (ADMN) ஆகியோர், BSNL சார்பாக திரு அனுபம் ஸ்ரீவாஸ்தவா CMD BSNL. திருமிகு சுஜாதா T ரே DIRECTOR(HR), திரு சௌரப் தியாகி Sr. GM (Estt), திரு A.M.குப்தா GM SR. மற்றும் திரு சிவ் சங்கர் பிரசாத் DGM(Estt) ஆகியோர் மற்றும் AUAB சார்பாக தோழர் P.அபிமன்யு GS/BSNLEU, தோழர் சந்தேஸ்வர் சிங் GS/NFTE, தோழர் K.செபாஸ்டியான் GS/SNEA, தோழர் பிரகலாத் ராய் GS/AIBSNLEA, தோழர் ரவி ஷில் வர்மா GS/AIGETOA தோழர் சுரேஷ் குமார் GS/BSNL MS, தோழர் ரேவதி பிரசாத் AGS/BSNL ATM, தோழர் ரெஷீத் கான் AGS/TEPU மற்றும் தோழர் H.P.சிங் Dy.GS/BSNL OA ஆகியோரிடையே 02.11.2018 அன்று பேச்சு வார்த்தை நடைபெற்றது.

24.02.2018 அன்று மத்திய அமைச்சர் கொடுத்த உறுதிமொழிகளின் மீது பொறுத்தமான நடவடிக்கைகளை எடுக்க தொலை தொடர்பு துறை தவறியதை முதலிலேயே சுட்டிக்காட்டிய AUAB தலைவர்கள், அதன் காரணமாகவே AUAB போராட்டங்களில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதையும் தெரிவித்தனர். மூன்றாவது ஊதிய மாற்றம் தொடர்பான பிரச்சனையில், அமைச்சரவையின் ஒப்புதலை பெறுவதற்கான அமைச்சரவைக் குறிப்பை தொலை தொடர்பு துறை விரைவில் அனுப்பும் என தொலை தொடர்பு துறையின் செயலாளர் தெரிவித்தார். பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ஊதிய மாற்றத்திற்கான உடன்பாடு காண்பது சிரமமாகிவிடும் என்பதால், மூன்று மாதத்திற்குள் ஊதிய மாற்ற பிரச்சனையை முழுமையாக தீர்வு கண்டிட வேண்டும் என AUAB தலைவர்கள் சுட்டிக்காட்டினர். இதில் ஒரு சில கேள்விகள் உள்ளதாகவும், இன்னமும் ஒரு வார காலத்திற்குள் இந்த கேள்விகளை எல்லாம் DOT, BSNLக்கு அனுப்பிவிடும் என்றும், அதற்கான பதில்கள் கிடைக்கப்பட்ட உடன் அமைச்சரவைக் குறிப்பு செயல்முறைக்கு உள்ளாக்கப்படும் என்றும் தொலை தொடர்பு துறையின் செயலாளர் தெரிவித்தார். அமைச்சரவைக் குறிப்பை தயாரிப்பதற்கான அனைத்து சம்பிரதாயங்களும் இந்த மாத இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என AUAB தலைவர்கள் கேட்டதற்கு, வேகமாக செயல்படுவதற்கு DOT செயலாளர் உறுதி அளித்தார்.

4G ஸ்பெக்ட்ரம், ஓய்கூதிய பங்கீடு மற்றும் ஓய்வூதிய மாற்றம் ஆகிய பிரச்சனைகளில் ஒரு பயனுள்ள ஒரு விவாதம் நடைபெற்றது. 4G ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் அமைச்சரவைக்கான குறிப்பு தயார் செய்யப்பட்டு அமைச்சரகங்களிடையேயான ஆலோசனைக்கு (INTER MINISTERIAL CONSULTAIONS) அனுப்பப்பட்டுள்ளதாகவும், விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலுக்கு செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஊதிய விகிதத்தின் உயர்ந்த பட்ச அளவிற்கு பதிலாக வாங்கும் உண்மையான சம்பளத்தில் ஓய்வூதிய பங்கீடு பிடிக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையினை DOTயின் சாதகமான பரிந்துரையோடு அடுத்த வாரத்தில் DEPARTMENT OF EXPENDITUREக்கு அனுப்பப்படும் எனவும் அவர் தெரிவித்தார். BSNL ஓய்வூதியதார்களுக்கான ஓய்வூதிய மாற்றம் தொடர்பாக பணியில் இருக்கும் ஊழியர்களின் ஊதிய மாற்றத்தோடு ஓய்வூதிய மாற்றத்தை இணைக்கக்கூடாது என்கிற நமது வாதத்தை TELECOM செயலாளர் ஏற்றுக் கொண்டது போலத்தான் தோன்றியது. இது தொடர்பாக தன்னுடன் விவாதிக்க வேண்டும் என MEMBER (SERVICES)I DOT செயலாளர் உத்தரவிட்டார். நேரடி நியமன ஊழியர்களுக்கான ஓய்வூதிய பலன்கள் பிரச்சனையில் BSNL தான் தீர்வு காண வேண்டும் என தொலை தொடர்பு துறையின் செயலாளர் தெரிவித்தார். மேலும் 2 சதவிகிதத்தை கூடுதலாக்க பரிசீலிப்பதாக CMD BSNL உறுதி அளித்தார்.

ஆனால் தொலை தொடர்பு செயலாளர் அறிவித்த படி DOTயிலிருந்து ஒரு கடிதம் பேரிடியாக BSNLக்கு வந்துள்ளது. அந்தக் கடிதத்தில் BSNLன் 2017-18ஆம் ஆண்டின் செயல்பாட்டு

வருமானம் கடந்த வருடத்தை விட 20% குறைந்துள்ளதாகவும், 2018-19ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அது கடந்த காலாண்டை விட 27.8% குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. 3வது ஊதியக் குழு பரிந்துரையை அமலாக்கினால் ஊழியர்களுக்கான செலவு என்பது செயல்பாட்டு வருமானத்தை விட அதிகமாக இருக்கும் என்றும் கூறியதோடு அந்த செலவினத்தை சமாளிக்க BSNL கொடுத்துள்ள ஆலோசனை ஏற்கத் தக்கதல்ல என்றும் மாற்று ஆலோசனைகளை தெரிவிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது. அரசு விதிகளின் படி BSNL ஊழியர்களின் வாங்கும் சம்பளத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்கீட்டை BSNLஇடம் இருந்து வாங்க வேண்டும் என்ற அமைச்சரின் வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டு விட்டு அரசு இந்த முன்மொழிவை நிராகரித்து விட்டது என்று கூறியுள்ளது.

மேலும் 4G சேவை வழங்குவதால் ஒரு சிறிய அளவிலான வருவாய் மட்டுமே உயரும் என்றும், ஆனால் அந்த சேவை வழங்குவதற்காக வங்கியில் இருந்து வாங்கும் கடனுக்கு வட்டி அதிகமாக இருக்கும் என்றும் தெரிவித்ததோடு, 4G ஸ்பெக்ட்ரம் வாங்கினால் அது எவ்வாறு BSNLக்கு லாபமீட்டி தரும் என்றும், எவ்வாறு சந்தையில் போட்டி போட முடியும் என்பதை புரிந்துக் கொள்ள முடியவில்லை என்றும் கேள்வி எழுப்ப்யுள்ளது.

மொத்தத்தில் நமது கோரிக்கைகளின் முக்கியமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என நிராகரித்துள்ளது.

இந்த நிறுவனத்தை பாதுகாக்க தொடர்ச்சியாக பல இயக்கங்களை நடத்தி வரும் ஊழியர்களுக்கும் ஊதிய மாற்றமும் தர முடியாது என்றும், BSNLன் ஜீவாதார கோரிக்கையான 4G ஸ்பெக்ட்ரம் ஒதுக்க முடியாது என்றும், ஓய்வூதிய பங்கீடு செலுத்துவது தொடர்பான அரசாங்க உத்தரவை BSNLக்கு அமலாக்க முடியாது என்றும் கூறியுள்ளது என்பது ஒட்டு மொத்த ஊழியர்களையும், அதிகாரிகளையும், BSNL நிறுவனத்தையும், BSNLன் சந்தாதாரர்களையும் ஏமாற்றும் போக்கு. DOTயின் இந்த போக்கு அனுமதிக்க முடியாது என்று கூறியே டிசம்பர் 3ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம்.

ஓங்கி ஒலிக்கட்டும் நமது கண்டன முழக்கங்கள். BSNL நிறுவனத்தை பாதுகாக்கும் எங்களால் ஸ்தம்பிக்கச் செய்யவும் முடியும் என்பதை நிரூபிப்போம். வேலை நிறுத்தத்தை நூறு சதவிகிதம் வெற்றி பெறச் செய்வோம். DOTயின் நம்பிக்கை துரோகத்தை முறியடிப்போம்.

■

# AUABயின் அமைப்பு நிலை

தொலை தொடர்பு துறையின் செயலாளருடன் நடைபெற்ற சந்திப்பிற்கு முன், NFTE சங்க அலுவலகத்தில் தோழர் சந்தேஸ்வர் சிங் GS NFTE, அவர்கள் தலைமையில் AUABயின் கூட்டம் நடைபெற்றது. தொலை தொடர்பு துறையின் செயலாளர் அவர்களுடனான நமது சந்திப்பில் நாம் எடுக்க வேண்டிய யுக்திகள் தொடர்பாக இறுதி செய்யப்பட்ட பின், AUABயினை பலப்படுத்துவதற்கும் அதன் செயல்பாடுகளை அதிகரிக்கவும் தேவையான வழிமுறைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. நீண்ட விவாதங்களுக்கு பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன:-

- AUAB தலைவரக தோழர் சந்தேஸ்வர் சிங் GS/NFTE தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- AUAB அமைப்பாளராக தோழர் P.அபிமன்யு GS/BSNLEU தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- AUABயில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து சங்கங்களின் பொது செயலாளர்களின் கையெழுத்தோடு தான் இயக்கங்களுக்கான அறிவிப்புகள் வெளியிடப்படும்.
- BSNL நிர்வாகம், DOT மற்றும் அரசாங்கத்திற்கு அனுப்பப்படும் இதர கடிதங்களில் தலைவரும், அமைப்பாளரும் கையெழுத்திடுவார்கள்.
- இதுவரை AUAB அமைக்கப்படாத மாவட்ட மற்றும் மாநிலங்களில் உடனடியாக அந்த அமைப்பை உருவாக்குவது. அகில இந்திய மட்டத்தில் அமைக்கப்பட்டதை போன்றே அனைத்து மாவட்டம்/ மாநிலங்களிலும் இந்த பதவிகள் தீர்மாணிக்கப்பட வேண்டும்.

## N.சிவசைலம் DOTயிலிருந்து மாற்றப்பட்டார்

DOTயின் சிறப்பு செயலாளராக இருந்த N.சிவசைலம் DOTயிலிருந்து வணிக துறைக்கு மாற்றப்பட்டார். அவருக்கு பதிலாக அன்ஷூ பிரகாஷ் DOTயின் கூடுதல் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். DOTயால் செயல்படுத்தப்பட்டு வரும் NOFN உள்ளிட்ட பல அரசு திட்டங்களை வேகப்படுத்தவே சிவசைலம் DOTயிலிருந்து மாற்றப்பட்டார் என கூறப்படுகிறது. இந்த திட்டங்கள் அனைத்தும் பிரதமர் அலுவலகத்திலிருந்து நேரடியாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. சிவசைலம் அவர்கள் BSNL இயக்குனர் குழுவிலும் இருந்தார் என்பதும், அவர் எப்போதும் BSNLக்கு எதிரானவராகவே இருந்தார் என்பதும், ஊழியர்களின் பல பிரச்சனைகளின் தீர்விற்கும் நிறுவனத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பல்வேறு முட்டுக்கட்டை போட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வங்கிகளில் இருந்து கடன் வாங்க BSNLக்கு DOT தடை

BSNLன் மீதான மற்றொரு தாக்குதலாக BSNL நிறுவனம் வங்கிகளில் இருந்து கடன் வாங்குவதற்கு DOT ஒரு புதிய தடையை விதித்துள்ளது. முதலீட்டு பணிகளுக்கு அல்லாமல் இதர காரியங்களுக்கு வங்கிகளில் இருந்து BSNL கடன் வாங்குவதற்கு DOT தடை விதித்துள்ளது. ஜியோவின் கடுமையான விலைக் குறைப்பு போட்டி காரணமாக BSNLன் வருவாய் கடுமையாக குறைந்துள்ளது. நிர்வாகம் ஊழியர்களின் ஊதியத்தை வழங்கக் கூட தடுமாறுகிறது. பல பட்டுவாடாக்களுக்கு கார்ப்பரேட் அலுவலகம் நிதி ஒதுக்குவதில்லை. எனவே ஆகஸ்ட் மாதம் முதல் மருத்துவ பில்களுக்கு பணம் தருவதில்லை. இந்த சூழ்நிலையில் DOT விதித்துள்ள இந்த புதிய கட்டுப்பாடு BSNLஐ சிரமத்திற்கு உள்ளாக்கும். ரிலையன்ஸ் ஜியோவினால் தனியார் நிறுவனங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் வங்கிகளில் இருந்து கடன் பெற்று சமாளிக்கின்றனர். ஏர்டெல் நிறுவனத்தின் வங்கிக் கடன் 1,13,000 கோடி ரூபாய்கள். வோடோபோன் நிறுவனத்தின் வங்கிக் கடன் 1,20,000 கோடி ரூபாய்கள். இவைகள் எல்லாம் வங்கிகளிடம் இருந்து கடனாகப் பெற்ற மக்களின் பணம். மக்களின் பணத்தை தனியார் நிறுவனங்கள் தங்களின் தேவைகளுக்காக சுலபமாக கடனாக பெறும் போது, BSNL ஏன் வங்கிக் கடன் வாங்கக் கூடாது. தனியார் நிறுவனங்களின் மிகப்பெரிய கடன் தொகையை பார்க்கும் போது BSNL வாங்கியுள்ள ஒரு சில ஆயிரம் கோடி ரூபாய்கள் என்பது ஒன்றுமில்லாதது. வங்கிக் கடன் வாங்க BSNLக்கு விதிக்கப்பட்டுள்ள இந்த தடை என்பது இந்நிறுவனத்தை நிர்மூலமாக்கச் செய்யும் ஒரு மிகப்பெரிய அடியாகும். இந்த தடைகளை எல்லாம் காலவரையற்ற வேலை நிறுத்தத்தின் மூலமே தடுத்து நிறுத்த முடியும். நாம் அனைவரும் இந்த விஷயத்தையும் புரிந்துக் கொண்டு நீண்ட காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு தயாராவோம்.

## தனியாருக்கு பரிவு காட்டும் DOT

தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களின் கோரிக்கைகளான ஸ்பெக்ட்ரம் கட்டணத்தை குறைப்பது, மற்றும் இதர வரிகளை குறைப்பது ஆகியவற்றை பரிசீலிக்க DOT குழுக்களை உருவாக்கியுள்ளதாக தொலைதொடர்பு துறை செயலாளர் திருமிகு அருணா சுந்தரராஜன் பத்திரிக்கையாளர்களிடம் தெரிவித்துள்ளார். அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற இந்திய மொபைல் மாநாட்டில் ஏர்டெல் அதிபர் சுனில் மிட்டல் பேசும்போது, தங்கள் நிறுவனங்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு 100 ரூபாயிலும், 37 ரூபாய் வரியாக செல்லும் அளவிற்கு தொலை தொடர்பு துறையில் வரிகள் அதிகமாக உள்ளது என கூறியுள்ளது இங்கு குறிப்பிட வேண்டி உள்ளது. இந்த புகாரினை பரிசீலிக்க குழு அமைக்கப்பட்டுள்ளதாக தொலை தொடர்பு துறை செயலாளர் தற்போது தெரிவித்துள்ளார். தனியார் நிறுவனங்களின் நலன் மீது இவ்வளவு அக்கறை செலுத்தும் அரசாங்கம் BSNLன் நலனில் ஏன் அக்கறை செலுத்துவதில்லை என்பதே நமது கேள்வி?

# யமஹா தொழிலாளர்களின் போராட்டம் – மாபெரும் வெற்றி

சென்னை அருகே உள்ள யமஹா தொழிற்சாலையில் CITU சங்கத்தின் கீழ் தொழிலாளர்கள் 55 நாட்கள் நடத்திய மாபெரும் வேலை நிறுத்தம் பிரமாண்டமான வெற்றியை பெற்றுள்ளது. CITU சங்கத்தின் கீழ் இந்திய யமஹா மோட்டா தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்த காரணத்தால் 2018, செப்டம்பர் 20ஆம் தேதி எந்த ஒரு விளக்கம் கோரும் கடிதமும் கொடுக்காமல் இரண்டு தொழிலாளர்களை யமஹா நிர்வாகம் வேலையை விட்டு டிஸ்மிஸ் செய்தது. அதன் காரணமாகவே இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றது.

யமஹா தொழிலாளர்களின் ஒன்றுபட்ட உறுதியான தொடர் போராட்டங்களின் காரணமாகவே இந்த வெற்றி சாத்தியமானது. இந்த போராட்டத்திற்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் CITU சங்கம் யமஹா SHOW ROOMகள் முன்னர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். SIPCOT தொழிலாளர்கள் தினம் தினம் வாயிற்கூட்டங்கள், மனித சங்கிலி, ஆர்ப்பாட்டம் என பல வகைகளில் போராட்டம் நடத்தியும், நன்கொடை கொடுத்தும் ஆதரித்தனர். கிட்டத்தட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இந்த போராட்டத்திற்கு ஆதரவு இயக்கத்தை நடத்தின. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள விவசாய சங்கம், வாலிபர் சங்கம், மாதர் சங்கம், நடுத்தர வர்க்க அமைப்புகள் என 53க்கும் மேற்பட்ட அமைப்புகள் ஆதரவு போராட்டங்களை நடத்தியதுடன் 4.5 லட்ச ரூபாய் அளவிற்கு நன்கொடையையும் வழங்கினர். அனைத்து அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களும் பங்கு பெற்ற பாதயாத்திரை மற்றும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றது. இவை அனைத்தும் தொழிலாளர் நலத்துறைக்கு பெருத்த நெருக்கடியை கொடுத்தது.

இந்த போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே நிர்வாகம் போராட்டத்தை உடைக்க பல தந்திரங்களை செய்தது. வேலைக்கு வந்தால் பல சலுகைகளை கொடுக்கிறோம் என்று ஆசை வார்த்தைகளை காட்டியது. தொழிலாளர்களின் இல்லங்களுக்கே சென்று பேசியது. ஆனாலும் தொழிலாளர்களின் ஒற்றுமையை அவர்களால் சிதைக்க முடியவில்லை.

தொழிலாளர் நலத்துறை ஐந்து முறை பேச்சுவார்த்தை நடத்தியது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஐந்து முறை அமைதி பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது. நிர்வாகத்தின் பிடிவாத நிலைபாடு காரணமாக உடன்பாடு எட்டப்படவில்லை. தீபாவளி உள்ளிட்ட திருவிழாக்கள் வந்து போனது. ஆனால் போராட்டம் தீவிரமாகவே நடைபெற்றது. இறுதியில் தொழிலாளர்- பொதுமக்களின் ஒற்றுமைக்கு நிர்வாகம் அடிபணிந்தது. மாவட்ட ஆட்சியர் மற்றும் தொழிலாளர் நலத்துறையினரின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டது.

### அந்த உடன்பாட்டின்படி :

- இரண்டு தொழிலாளர்களின் பணி நீக்கம் ரத்துசெய்யப்பட்டு, தற்காலிக பணியிடை நீக்க உத்தரவு வழங்கி விசாரணை மேற்கொள்ளப்படும். தற்காலிக பணி நீக்க காலத்திற்கு முழு சம்பளம் வழங்கப்படும். விசாரணையின் இறுதியில் தவறு நிரூபிக்கப்பட்டால் கூட பணிநீக்கம் போன்ற கடுமையான தண்டனை வழங்கப்படக் கூடாது.

- இரு தரப்பும் தாங்கள் தாக்கல் செய்துள்ள, சிவில், கிரிமினல் மற்றும் தொழிலாளர் வழக்குகளை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

- வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காரணத்தால் எந்த ஒரு தொழிலாளி மீதும் நடவடிக்கை ஏதும் எடுக்கக்கூடாது.

தொழிலாளர்களின் ஒன்று பட்ட உறுதியான தொடர்போராட்டங்கள் மூலமே நமது கோரிக்கைகள் வென்றடைய முடியும் என நிரூபித்துள்ள யமஹா தொழிலாளர்களை தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் மனதார பாராட்டுகிறது.

■

# பணி ஓய்வு

தோழர் **A.N.J.பிரசாத்** OS வாணியம்பாடி

1981ல் குறு நேர டெலிகிராபிஸ்டாக வாணியம்பாடியில் பணியில் சேர்ந்த தோழர் A.N.J.பிரசாத் 1984ல் நிரந்தர ஊழியராக பணியமர்த்தப்பட்டார். ஆரம்ப நாள் முதலாகவே நமது கே.ஜி. போஸ் இயக்கத்தில் சிறப்பாக பணியாற்றிய இவர் நமத் BSNL ஊழியர் சங்கத்தின் வாணியம்பாடி கிளை செயலாளர், மாவட்ட சங்க நிர்வாகி என பல பொறுப்புகளில் திறம்பட பணியாற்றி 30.11.2018 அன்று பணிஓய்வு பெற்றார். சமீபத்தில் நடைபெற்ற வேலூர் மாவட்ட மாநாட்டில் பெரும்பங்காற்றிய அவர் தனது பணிஓய்வினை ஒட்டி தமிழ் மாநில சங்கத்திற்கு ரூ.500 நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் **A.சுந்தர்** OS விழுப்புரம்

01.04.1980ல் டெலிகிராஃப் மேனாக பணியில் சேர்ந்த தோழர் A.சுந்தர், பின்னர் 22.01.1986ல் டெலிகிராபிஸ்டாக பதவி உயர்வு பெற்றார். சென்னை, புதுவை விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ள தந்தி அலுவலகத்தில் சிறப்பாக பணியாற்றிய இவர் இறுதியாக விழுப்புரம் வாடிக்கையாளர் சேவை மையத்தில் OS ஆக பணி புரிந்து 31.08.2018 அன்று பணி ஓய்வு பெற்றார். ஆரம்ப நாள் முதலாகவே நமது இயக்கத்தின் முன்னணி வீரராக செயல்பட்டு வந்த தோழர் சுந்தர், விழுப்புரம் கிளை BSNL ஊழியர் சங்கத்தின் செயலாளராக 11 ஆண்டு காலத்திற்கு மேல் திறம்பட பணியாற்றினார். நமது இயக்கம் விடுக்கும் அனைத்து போராட்டங்களிலும் பங்கு பெற்றதோடு, மற்ற தோழர்களையும் அதில் சிறப்பாக ஈடுபடுத்துவார். இவர் தனது பணி ஓய்வினை ஒட்டி மத்திய மாநில சங்கங்களுக்கு தலா ரூ.1,000/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் **K.பூபதி** TT
ஜக்கார்பாளையம்(பொள்ளாச்சி)

13.04.1982ல் ரெகுலர் மஸ்தூராக பல்லடத்தில் பணியில் சேர்ந்த தோழர் K.பூபதி பின்னர் டெலிகாம் மெக்கானிக்காக பதவி உயர்வு பெற்று ஜக்கார்பாளையம் தொலைபேசி நிலையத்தில் 30 ஆண்டுகாலமாக பணியாற்றி தனது 36 ஆண்டுகால சேவைக்கு பின் 31.08.2018 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார். பணியில் சேர்ந்த காலத்தில் இருந்து K.G.போஸ் இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அனைத்து போராட்டங்களிலும் முன்னணியில் நின்று செயல்பட்டார். இவர் தனது பணி ஓய்வினை ஒட்டி கிளை, மாவட்ட மாநில சங்கங்களுக்கு தலா ரூ.500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் **K.ராமலிங்கம்** TT நார்த்தாம் பூண்டி

1982ல் இலாகாவில் பணியில் சேர்ந்த தோழர் K.ராமலிங்கம் TT அவர்கள் திருவண்ணாமலை மாவட்டம் நார்த்தாம்பூண்டி தொலை பேசிநிலையத்தில் பணியாற்றி தனது 36ஆண்டுகால சேவைக்கு பின் 30.09.2018 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார். நமது சங்கத்தின் அனைத்து இயக்கங்களிலும் சிறப்பாக பங்காற்றியுள்ள அவர் தனது பணி ஓய்வினை ஒட்டி மாநில மாவட்ட சங்கங்களுக்கு தலா ரூ.500/- நன்கொடை வழங்கியுய்ள்ளார்.

தோழர் **ராஜேஸ்வரி கிருஷ்ணன்** OS(TL)
மதுரை

02.08.1982ல் மதுரை தந்தி அலுவலகத்தில் டெலிகிராபிஸ்டாக பணியில் சேர்ந்த தோழர் ராஜேஸ்வரி கிருஷ்ணன் அவர்கள் பின்னர் மதுரை பொது மேலாளர் அலுவலகத்தில் OS(TL) ஆக பணி புரிந்தார். இவர் தனது 36

ஆண்டுகால சேவைக்கு பின் 15.10.2018 அன்று விருப்ப ஓய்வில் சென்றுள்ளார். நமது சங்கத்தின் பிடிப்பு மிக்க தோழரான தோழர் ராஜேஸ்வரி கிருஷ்ணன் தனது பணி ஓய்வினை ஒட்டி தமிழ் மாநில சங்கத்திற்கு ரூ.500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் **V. ராமகோடிராஜன்,** TT,
பெருந்துறை

15-07-1982 ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் இலாகா பணியில் சேர்ந்த தோழர் V.ராமகோடிராஜன் அவர்கள் தனது 36 ஆண்டு கால பணியினை நிறைவு செய்து 31.10.2018ல்

பெருந்துறை Project Vijay யிலிருந்து பணி ஓய்வு பெற்றுள்ளார். ஆரம்ப காலம் முதற்கொண்டு நமது இயக்கத்தில் சிறப்பாக பணியாற்றிய தோழர் V.ராமகோடிராஜன் பெருந்துறை கிளையின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட பல தொழிற்சங்க பொறுப்புகளை ஏற்று செயல்பட்டவர். இவர் தனது பணி ஓய்வினை ஒட்டி தமிழ் மாநில சங்கத்திற்கு ரூ. 500.00 நன்கொடையாக கொடுத்துள்ளார்.

***அனைவரின் பணி ஓய்வுக் காலமும் இனிதே அமைய மாநிலச் சங்கம் வாழ்த்துகிறது*** ■

## ஆணவக் கொலைகளுக்கு முடிவே இல்லையா?

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று ஔவை பாட்டி பாடிய தமிழகத்தில் சாதி ஆணவத்தால் கடந்த ஐந்து ஆண்டுகளில் 157 ஆணவக் கொலைகளாம். கொடுமை. அந்தப் பட்டியலில் சமீபத்தில் கொலை செய்யப்பட்டவர்கள் ஓசூரை சார்ந்த நந்தீஷ் மற்றும் அவரது மனைவியும் அவர்களின் காதலால் உருவான மூன்று மாத சிசுவும்தான்.

ஒசூர் அருகே உள்ள சூடுகொண்டப்பள்ளியை சார்ந்த தலித் வாலிபன் நந்தீஸும் அவரது கிராமத்தை சார்ந்த சுவாதியும் ஆக்ஸ்ட் மாதம் 15ஆம் தேதி சுவாதி வீட்டாரின் எதிர்ப்பை மீறி திருமணம் செய்து கொண்டதோடு, அந்தக் கிராமத்தில் பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தால் ஒசூரில் தனியாக வீடு எடுத்து வாழ்க்கையை துவங்கியுள்ளனர். நவம்பர் மாதம் 10ஆம் தேதி சுவாதியின் உறவினர்கள் இவர்களை சமாதான வார்த்தைக் கூறி காரில் ஏற்றி கடத்திச் சென்று அவர்களை கொடூரமாக கொலை செய்து முகத்தை சிதைத்து கர்நாடக மாநிலம் மாண்டியா அருகில் காவேரி ஆற்றுக்குள் மூட்டையாக கட்டிப்போட்டுள்ளனர். அந்த உடல்கள் அடையாளம் தெரியாமல் இருந்த போது நந்தீஸ் அணிந்திருந்த அம்பேத்கார் டீ சர்ட் மூலமாகவே அடையாளம் காணப்பட்டனர். சுவாதியின் வயிற்றில் இருந்த மூன்றுமாத சிசுவும் இதில் கொலையுண்டது மிக மிகக் கொடுமை.

உடனடியாக தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநில செயலாளர் தோழர் சாமுவேல் ராஜ் உள்ளிட்ட பல அமைப்புகளின் தலைவர்களின் தலையீட்டால் தற்போது சுவாதியின் தந்தை உள்ளிட்ட உறவினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது ஆணவப் படுகொலையின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தான் பெற்ற மகளையும், அவள் உயிரினும் மேலாக நினைத்த அவளின் கணவனையுமே கொலை செய்யும் அளவிற்கு வெறி பிடித்து ஆடும் சாதியை என்று தான் சாய்ப்போமோ?

# வெண்மணி-50

தமிழகத்தின் கீழத் தஞ்சை மாவட்டத்தில் இன்றைய நாகப்பட்டினம் மாவட்ட கீழ் வேளூருக்கு அருகில் உள்ள சின்னஞ்சிறிய கிராமம் கீழவெண்மணி. கூலியாக அரைபடி நெல் அதிகம் கேட்டதற்காக 44 மனித உயிர்கள் ராமையா என்கிறவரின் குடிசையில் கூண்டோடு மனித மிருகங்களால் எரிக்கப்பட்ட நாள் டிசம்பர் 25, 1968.

1960களில் தமிழகத்தின் நெற்களஞ்சியமான ஒன்று பட்ட தஞ்சை மாவட்டம் முழுவதும் பண்ணையார்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. விவசாய நிலங்களுக்கு அருகில் உள்ள மரத்தில் தனது தாயின் சேலையால் கட்டப்பட்ட தொட்டிலில் கிடக்கும் பச்சைக் குழந்தை பாலுக்கு அழுதது என்றாலும் வேலையை முடிக்காமல் தனது சேய்க்கு தாயால் பால் கொடுக்க முடியாது. எதிர்த்து பேச முடியாது. யாரேனும் எதிர்த்து பேசினாலொ, ஆண்டைக்கு ஏதாவது காரணத்திற்காக கோபம் வந்தாலொ பண்ணையடிமைக்கு சாணிப்பாலும் சவுக்கடியும் தான் கிடைக்கும். மேலும் தீண்டாமைக் கொடுமை தலைவிரித்தாடியது.

சாணிப்பால் கொடுத்தால் குடிக்காதே, சவுக்கால் அடித்தால் திருப்பி அடி என்ற கோஷத்தோடு கர்நாடக மாநிலத்தில் இருந்து தஞ்சை தரணிக்கு வந்தவர் தான் தோழர் சீனிவாசராவ். உழைக்கும் மக்களுக்கு உற்ற பாதுகாவலனாம் செங்கொடியினை கிராமம் தோறும் ஏற்றினார். அனைத்து பகுதி மக்களையும் செங்கொடி சங்கத்தின் இணைத்தார். போராட்டம் நடத்தினார். சாணிப்பாலுக்கும் சவுக்கடிக்கும் மரண அடி கொடுத்தார்.

இவருக்கு மாற்றாக நெல் உற்பத்தியாளர் சங்கத்தை பண்ணையார்கள் உருவாக்கினார்கள். அவர்கள் சங்கத்தில் சேர்ந்தால் பல சலுகைகள் தருவதாக ஆசை வார்த்தை காட்டினார்கள். ஆனால் செங்கொடியின் மீதிருந்து உறுதியான பாசத்தால் மறுத்து செங்கொடி சங்கத்தின் கீழ் நின்று தங்களின் உரிமைகளுக்காக போராடினார்கள். விவசாய தொழிலாளர்கள் அரை படி நெல் அதிகம் கேட்டு கோரிக்கை வைத்தனர். சமரச பேச்சு வார்த்தைகள் தோல்வி அடைந்தன.

நேற்றுவரை கைகட்டி நின்றவர்கள் சங்கம் கொடுத்த தைரியத்தில் சமமாக உட்கார்ந்து பேச்சு வார்த்தை நடத்துகின்றார்களே என்ற கோபம் பண்ணையார்களுக்கு உச்சத்தில் ஏறியது. கீழ வெண்மணியை சேர்ந்த இருவரை கட்டி வைத்து அடிக்கிறார்கள். இதனை தொழிலாளர்கள் எதிர்க்கிறார்கள். பண்ணையார்கள் கலவரத்தை ஏற்படுத்துகின்றனர். ஏசு பிரான் அவதரித்த கிறிஸ்துமஸ் தினத்தன்று இரவு நெல் உற்பத்தியாளர் சங்கத தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் வந்த பண்ணையார்கள் கீழ வெண்மணியில் கண்டவர்களை எல்லாம் சுட்டனர். அஞ்சி நடுங்கிய 20 பெண்கள், 19 குழந்தைகள், 5 வயதான ஆண்கள் அனைவரும் ஓரத்தில் இருந்த ராமையா என்பவரின் குடிசைக்குள் ஒளிந்துக் கொண்டனர். அந்த வெறியனின் கண்ணில் அது தென்பட்டவுடன் அந்தக் குடிசைக்கு வெளியே பூட்டு போட்டு விட்டு அந்த குடிசைக்கு தீவைத்தான். ஒட்டு மொத்தமாக 44 பேரும் கரிக்கட்டையானார்கள்.

வழக்கு நடந்தது. இறுதியில் கொலையாளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். அதற்காக அந்த (அ)நீதிமன்றம் சொன்னது என்ன தெரியுமா? "இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைவருமே நிலக்கிழார்களாக இருப்பது வியப்பாக உள்ளது. அவர்கள் அனைவரும் பணக்காரர்கள். கவுரவமிக்க சமூக பொறுப்புள்ள அவர்கள் இந்த குற்றத்தை செய்திருக்க மாட்டார்கள் என நம்புகிறோம்".

தியாகிகள் 44 பேர் மரணமடைந்திருக்கலாம். அவர்கள் செய்த தியாகத்தின் விளைவாக செங்கொடி இயக்கம் வலுவானது.

அந்த கொடுமை நடந்து 2018-டிசம்பர் 25ல் 50 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. வெண்மணி தீயில் கருகிய அந்த மலர்களுக்கு நம் அஞ்சலியை செலுத்துவோம். சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தில் அந்த தியாகிகளின் நினைவை நெஞ்சில் நிறுத்துவோம். ■

Published by **S.CHELLAPPA** on behalf of BSNL EMPLOYEES UNION, TAMILNADU CIRCLE Published from RK Srinivas Flats, No.21, Bharathiyar 1st Street, Pazhavanthangal, Chennai-600 114. Kancheepuram District. and Printed by S.KARLMARX Printed at S.K.PRINTERS, No.18/17, EWS, NH1, Eladhariyan Street, Maraimalai Nagar, Chengalpattu Taluk, Kancheepuram District. Editor : **S.CHELLAPPA**, Phone : 044-2267 3931, Mobile : 94440 31715, Email : bsnleutnc@gmail.com, Website : www.bsnleutnc.com

# 30.10.2018 அன்று தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்ற AUAB தர்ணா போராட்டக் காட்சிகள்

சென்னை

ஈரோடு

கடலூர்

குன்னூர்

தருமபுரி

கும்பகோணம்

மதுரை

நாகர்கோயில்

புதுவை

சேலம்

தஞ்சாவூர்

திருநெல்வேலி

திருப்பூர்

திருச்சி

தூத்துக்குடி

வேலூர்

விருதுநகர்

கோவை

**THOLAI THODARBU THOZHAN** Regd. with Registrar of Newspaper for India under No.TNTAM/2015/65855
Patrika Channel. Date of Publication : 27th of every month Registration No.TN/CC/(S)DN/550/16-18

# 14.11.2018 அன்று நாடு தழுவிய பேரணி காட்சிகள்

சென்னை

கோவை

குன்னூர்

கடலூர்

தருமபுரி

ஈரோடு

காரைக்குடி

மதுரை

நாகர்கோயில்

கும்பகோணம்

புதுவை

சேலம்

தஞ்சாவூர்

திருச்சி

தூத்துக்குடி

வேலூர்

விருதுநகர்